**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.**

O.S.No.26/2023

Deposition of witness for DW1

| | | |
|---|---|---|
| Name | : | திருமலைச்சாமி |
| Father's Name | : | சுப்பையாத்தேவர் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.11.2025.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. தபசில் சொத்திற்கு கடந்த 24.09.2025 தேதி அன்று ராஜகோபாலபேரி கிராமநிர்வாக அலுவலர் 2ம் பிரதிவாதி பெயருக்கு வழங்கப்பட்ட அனுபவ சான்று உண்மை நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மேற்படி ஆவணம் வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரர் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணம் என்றும், கிராமநிர்வாக அலுவலரால் அனுபவ சான்று வழங்க அதிகாரம் இல்லை என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இந்த ஆட்சேபனையானது வழக்கின் இறுதி

விசாரணையின் போது பரிசீலனை செய்யப்படும். மேற்படி ஆவணம் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

2. பட்டா எண்.985 லிலிருந்து சர்வே எண்.42/1F 517 எண் பட்டா என SR No.2295/9899 நாள் 15.03.1998 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளதை காண்பிக்கக்கூடிய 10(1) சிட்டா உண்மை நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 1ம் பிரதிவாதியின் தந்தை சுப்பையாதேவர் பெயரில் 517 என்ற எண்ணில் தனிப்பட்டா வழங்கப்பட்டதற்கான சான்று உண்மை நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 1ம் பிரதிவாதி தந்தை வழி தாத்தா நன்னித்தேவர் பெயரில் உள்ள "அ" பதிவேடு உண்மை நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. தாவா சொத்து 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.4523ன் கணினி வழி பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.